இருக்கும் நிலையில், கல்லூரிகளுக்கும், கலாசாலைகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் செல்வது என்கிற நல்ல முடிவை எடுத்து இருக்கிறார்கள். அதையொட்டி இந்திப் படங்கள் காட்டப்படக்கூடாது என்று மாணவர்களால் தடுக்கப்படமாட்டாது என்று நாம் நம்புகின்றோம். இந்திப் படங்கள் திரையிடப்படும். திரைப்படத் துறையினரும், அரங்கு உரிமையாளர்களும் பாதுகாப்பு வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதுகாப்பு அளிக்கவேண்டிய நிலையை மாணவர்கள் உருவாக்க மாட்டார்கள் என்கிற நம்பிக்கை இருக்கிறது. அப்படிப் பாதுகாப்புகள் அரங்குகளுக்குத் தேவையென்றால், அதைச் சர்க்கார் அளிக்கத் தயாராகவும் இருக்கிறது.

நான் முன்பே குறிப்பிட்டபடி, பம்பாயில் உள்ள நிலை அந்த மாநிலத்தினுடைய பிரச்சினை. இந்த மாநிலத்தின் அதிகார நடவடிக்கைகளுக்கு உள்ளே அது வராது. ஆகவே, இந்த ஒத்திவைப்பு பிரேரணை தேவையில்லை என்ற கருத்தினை தெரிவிக்கிறேன். (திரு. கே. விநாயகம் : ஹியர், ஹியர்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் விளக்கத்தின் மேலும், அவை விதி 50 (10) தெளிவாக இது நம்முடைய அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று கூறுகின்ற காரணத்தாலும் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ii) கச்சத்தீவில் இலங்கைத் துருப்புகள் ஆக்கிரமிப்பு

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தமிழக சட்டப் பேரவை 42-வது விதிகளின்கீழ், கீழ்க்காணும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்:—

"தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத்தீவு என்னும் பகுதியை இலங்கைத் துருப்புகள் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதால் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்து".

தலைவர் அவர்களே, இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மாத்திரம் சொல்லிக்கொண்டு உரையை முடிக்கிறேன்.. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பற்றிப் பேச வேண்டாம். அமைச்சர் விளக்கம் சொல்லுவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது. சபாநாயகர் முடிவினைக் கேட்டு தலை வணங்குவது நலம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கச்சத்தீவு பற்றிய நிகழ்ச்சி மத்திய சர்க்காரின் பொறுப்பில் இருக்கிறது. வேறொரு சர்க்காரைப் பற்றி நாம் இங்கே விவாதிப்பது கூடாது என்பதற்குத் தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

" 'Indians in Ceylon' is a Central subject and questions on it should be addressed to the Central Government. "

என்று 1950-லேயே ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

'Central subjects-Enclaves in States and their transfer is a Central subject and questions on it should be addressed to the Central Government.'

என்று மேலும் ஒரு தீர்ப்பு 1950-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'Consent withheld on the ground that the subject-matter relating to another country was to be considered only in the Parliament despite the fact that the House was directly interested in the problem.

என்கிற தீர்ப்புகள் முன்பே தரப்பட்டு இருப்பதால், நம்முடைய சர்க்காருடைய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது இது. ஆகவே, நம்முடைய விதி 50 (10)-ஐ ஒட்டியும் இந்தத் தீர்மானத்திற்கு அனுமதியை மறுக்கிறேன்.

திரு. கே. விநாயகம் : சார், ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவரவர்கள் எடுத்துக்காட்டியது போல, இது ஒரு வேளை சென்ட்ரல் சப்ஜெக்ட் என்பதால் இங்கே பேசக்கூடாதோ என்பதும் எங்களுக்கும் தெரியும். ஆயினும், எங்களுக்கு வந்த தகவல், இராமநாதபுரம் ராஜா ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்தத் தீவு, நம்முடைய மாநில சர்க்காருக்கு, தமிழக மாநிலத்திற்குச் சொந்தம் என்கிற காரணத்தினால், நம்முடைய சொத்தாக இருக்கிறது என்கிற தகவல் எங்களுக்கு வந்தால் கொண்டு வந்தோம். துணைச் சபாநாயகருடைய விளக்கம் .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றார்கள். இது எந்த வகையில் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று விளக்குவார்களா ?

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் ...

திரு. கே. விநாயகம் : என்னைக் கேட்டீர்கள்...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் மீது, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று நினைக்கிறேன். அவர்கள் முதலில் சொல்லட்டும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இது எப்படி அவசர முக்கியத்துவம் பெற்றது என்று தெளிவாகக்கூட நான் பிரசங்கம் செய்ய விரும்பவில்லை. எனக்குச் சந்தர்ப்பம் கொடுக்க மறுத்துவிட்டீர்கள். வருந்துகிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, my point of order is that this House is competent to discuss this matter. Because the Hon. Deputy Speaker is under the erroneous impression..............

(திரு. இராம. அரங்கண்ணல் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : (திரு. விநாயகத்தை) நீங்கள் உட்காருங்கள். சென்டர் சம்பந்தப்பட்ட ஒன்று. சிலோன் சர்க்கார் சம்பந்தப்பட்ட விஷயம். அது வெளிநாட்டுப் பேச்சு. அதில் மாநில சர்க்காருக்குப் பொறுப்பு இல்லை. அவர்களோடு பேசவேண்டியது மத்திய சர்க்கார். நம் மாநிலத்திற்கு உரியதா அல்லவா என்பதல்ல வாதம். மக்கள் இருக்கும் பிரச்சினை வேறு. வெளி நாட்டு அரசோடு தொடர்பு கொள்ளவேண்டிய உரிமை உள்ள அரசு மத்திய சர்க்கார். ஆகவே, என்னுடைய தீர்ப்பு இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பது.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்கிய பிறகு, இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர் ஒருவர், நீங்கள் வழங்கிய தீர்ப்பின்மீதே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாமா என்பதைப் பற்றித் தங்களுடைய தீர்ப்பை நான் கோருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த உறுப்பினர் அவர்கள் எழுப்பியதை ஒழுங்குப் பிரச்சினையாகவே நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அது ஒழுங்குப் பிரச்சினை ஆகாது.

திரு. கரு. சீமைச்சாமி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். இந்தக் கச்சத்தீவு இராமநாதபுரம் ராஜாவுக்குச் சொந்தமானது என்று அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே .. ..

1968 மார்ச் 2]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. உட்காருங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : க்ளாரிபிகேஷன்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : க்ளாரிபிகேஷனாக இருக்கலாம். ஆனால், நீங்கள் எழுப்பியது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல

(இத்தருணத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கரு. சீமைச்சாமி, திரு. க. ர. நல்லசிவன், திரு. செ. பாலசுப்பிரமணியன், திரு. ம. பொ. சிவஞானம் ஆகியோர் எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தயவுசெய்து உட்கார வேண்டும்.

பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டேன். விளக்கமாகச் சொல்லிவிட்டேன். இது இராமநாதபுரம் ராஜாவுக்குச் சொந்தமாகி, தமிழ்நாட்டோடு சேர்ந்தது என்ற அளவில் இல்லாமல் நம்முடைய தமிழ் நாட்டோடு பன்னெடுங்காலமாகச் சேர்ந்திருந்த நாடாக இருந்தாலுங் கூட, அதன்மீது படை எடுத்திருப்பவர்கள் அல்லது ஆக்ரமித்து இருப்பவர்கள் என்று சொல்லப்படுவது வெளிநாட்டு அரசு. ஆக, வெளிநாட்டு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை மீது விவாதிப்பதற்கு இந்த அரசுக்கு உரிமை இல்லை. வெளிநாடு பற்றிய தொடர்பைக் குறித்துப் பேச, மத்திய அரசுக்குத்தான் பொறுப்பு. ஆகவே, இந்த அரசுக்குப் பொறுப்பு இல்லை என்ற காரணத்தால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன். இதன் மீது விளக்கம் கோருவதோ, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதோ முறையாகாது.

அடுத்து, திரு. பொன்னப்ப நாடார் . . . . . .

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே மாண்புமிகு உறுப்பினர் திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் தீர்ப்புக் கொடுத்துவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அந்தத் தீர்ப்புக்கு அடங்கப் போகிறார்களா, அல்லது தீர்ப்பை மீறப் போகிறார்களா என்பது தான் கேள்வி.

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, கச்சத்தீவு தமிழ் நாட்டுக்குச் சொந்தமானது. நாம்தான் மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்கவேண்டியவர்கள். இதைப் பற்றிப் பூரா விவரங்களையும் சபை நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நீங்கள் அனுமதி அளிக்காத காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டு வெளிநடப்பு செய்கிறோம்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. ர. நல்லசிவன் அவர்களும், திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்களும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கச்சத்தீவு என்பது தமிழ்நாட்டுக்கு உட்பட்டது என்றாலும், அதைப்பற்றி மத்திய சர்க்காருக்குத் தகவல் தரவேண்டிய பொறுப்பு மாநில சர்க்காருக்கு இருக்கிறது என்றாலும், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான கடமையை இந்த மாநில சர்க்கார் மறந்துவிடவில்லை. அந்தக் கடமையை நிறைவேற்றும் நேரத்தில் நிறைவேற்றும். ஆனால், ஒற்றிவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவரும் நேரத்தில், இது வெளிநாட்டுப் பிரச்சினை என்கிற அளவிலும், அதற்குப் பொறுப்பாக உள்ள மத்திய சர்க்கார் தான் இதுபற்றி விளக்கம் அளிக்கவேண்டியவர்கள் என்ற அளவிலும், இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கு அனுமதி அளிக்க மறுத்ததற்காக வெளிநடப்பு செய்வது உரியதல்ல. அது அவர்களுடைய கட்சிக்கு உரியதாக இருந்தால் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. க. இராமமூர்த்தி அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் நாளை மறுநாள் எடுத்துக்கொள்ள இருக்கிறேன். என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் சிலர் உட்கார்ந்துகொண்டே ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.)

3. 1968-69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம், மூன்றாம் நாள், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. எஸ். கோவிந்தராஜன் அவர்கள் பேசுவார்கள்.

திரு. வி. எஸ். கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே .. .. ..

4. அவையுரிமைக் கேள்வி.

திரு. கே. விநாயகம் மீது.

திரு. க. இராமமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார், சபை நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும்போது தனியாக வாதங்கள் இங்கே நடந்துகொண்டிருக்கிறது. இது முறையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எதற்கு வேண்டுமானாலும் எழுந்து, எழுப்புவது உறுப்பினர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. இனி, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லாததற்கும் "பாயிண்ட் ஆப் ஆர்டர்" என்று சொல்லி, எழுந்து, எழுப்பினால், இங்கே உட்கார்ந்திருக்கும் பேரவைத் தலைவரோ, துணைத் தலைவரோ, அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது என்பது பற்றி யோசிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

Thiru K. VINAYAKAM : (said sitting) That is our privil ge. You have no right to punish us. What are you talking ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைச் சபாநாயகருக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு வந்திருக்கும் காரணத்தால், இதுபற்றி இங்கே மேலும் விவாதம் ஏதுமின்றி, நானே அதை அவையுரிமைக் குழுவுக்கு அனுப்புவது என்று தீர்மானித்திருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Dr. H. V. HANDE : Is there any instance in any part of India in any legislature when a Speaker or Deputy Speaker has taken action because a point of order raised is not a point of order? If such a actio i is tak n we will react more. It will be injurious to democracy. லோக் சபாவைப் பாருங்கள். எல்லா சட்டசபைகளையும் பாருங்கள். Why do you take such a serious step ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், இந்தியாவிலே இருக்கும் எல்லா மாநிலங்களிலும் உள்ள உரிமைகள் இங்கே வரவேண்டும் என்கிறார்களா என்று தெரியவில்லை. தயவுசெய்து, நம்முடைய தமிழ்நாட்டுச் சட்ட மன்றம் கட்டிக்காத்துவரும் நல்ல பண்புகளை, வேறு மாநிலங்களையெல்லாம் உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு, கெடுத்துவிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த எந்த மாநிலங்களிலோ என்ன என்னவோ நடைபெறுகின்றன. அவையெல்லாம் இங்கே நடைபெறவேண்டாம். துணைச் சபாநாயகர் தீர்ப்புக் கூறியபின், அவர்களுக்குப் பேச வாய்ப்பு இல்லை என்று, உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே ஒருவருக்கொருவர்